**தனிக்கவனம்**

எண் பி1/2761/2019

சிறுபான்மையினர் நல இயக்ககம்,
சேப்பாக்கம், சென்னை-5
நாள் 18.7.2019

# சுற்றறிக்கை

பொருள் சிறுபான்மையினர் நலம் - கல்வி உதவித்தொகை - பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை 2019-20 - தேசிய கல்வி உதவித்தொகை இணையம் மூலம் (National Scholarship Portal) செயல்படுத்துதல்- தொடர்பாக.

பார்வை: 1. புது தில்லி சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தின் இந்திய அரசின் செயலாளரின் நேர்முகக் கடிதம் எண் 8-3/2019-SS நாள் 5.7.2019 (அரசு தலைமை செயலாளர் அவர்களுக்கு முகவரியிடப்பட்டது).

2. மத்திய அரசு கடித எண் 8-4/2019-SS, சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சகம், புது தில்லி, நாள் 17.7.2019.

---

சிறுபான்மையினர் நலத்துறையில் 2018-19 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் ஆகிய மூன்று திட்டங்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையம் வாயிலாக (National Scholarship Portal) செயல்படுத்தப்பட்டபோது பள்ளி/கல்வி நிலையங்களின் உள்ளீட்டு விவரங்களை தவறான வகையில் பயன்படுத்தி போலி விண்ணப்பங்கள் கண்டறியப்பட்டு சிறப்பு நிகழ்வின் மூலம் நிராகரிக்கப்பட்டது தாங்கள் அறிந்ததே.

2. இந்நிலையில், மேற்காணும் நிகழ்வுகள் நடப்பு கல்வியாண்டில் நிகழாவகையில் உறுதிசெய்யும்வண்ணம் தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து பள்ளி/கல்வி நிலையங்களின் விவரங்களை குறிப்பிட்ட படிவங்களில் பெற்று (Institute Registration Forms) அவைகள் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்களால் (District Nodal Officer) சரிபார்க்கப்பட்ட பின்னர் பயனாளர் குறியீடு மற்றும் புதிய கடவுச்சொல் (User Id and Password)ஆகியவைகளை பள்ளி/கல்வி நிலையங்களுக்கு ஒப்புதல்(approval) அளிக்குமாறு பார்வை 1ல் காணும் நேர்முகக் கடிதத்தில் மத்திய அரசின் சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3. இதவை தவிர, 2019-20 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை திட்டத்தினை தேசிய கல்வி உதவித்தொகை இணையம் (National Scholarship Portal) மூலம்

செயல்படுத்துவது தொடர்பான பின்வரும் கால அட்டவணை பார்வை 2ல் காணும் கடிதம் மூலம் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

| | பள்ளிப்படிப்பு | பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய |
|---|---|---|
| தேசிய கல்வி உதவித்தொகை இணையதளம் திறப்பு | 15.7.2019 | |
| மாணவ மாணவியர்கள் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி | 15.10.2019 | 31.10.2019 |
| பள்ளி/கல்வி நிலையங்கள் சரிபார்ப்பதற்கான கடைசி தேதி | 31.10.2019 | 15.11.2019 |
| மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களால் சரிபார்ப்பதற்கான கடைசி தேதி | 15.11.2019 | 30.11.2019 |

4. எனவே, மத்திய அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு, நடப்பு கல்வியாண்டில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட கீழ்காணும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலராக(District Nodal Officer) செயல்படும் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

i. தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நமது மாநிலத்தில் செயல்படும் அனைத்து பள்ளிகள்/ கல்லூரிகளின் சுய விவரங்களை (Profile details) இணைப்பு 1ல் காணும் கட்டாய வழிமுறைகளைப் (Mandatory instructions) பின்பற்றி சரிபார்த்து ஆன்லைனில் ஒப்புதல்(approval) அளிக்கப்படவேண்டும்.

ii. இவ்வழிமுறைகள் குறித்து மாவட்டங்களில் செயல்படும் அனைத்து அரசு /அரசு உதவிபெறும் / அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளி / கல்வி நிலையங்களுக்கும் தெரிவிக்கப்படவேண்டும் எனவும், அவ்வாறு தெரிவிக்கப்பட்டதற்கான அறிக்கை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

iii. இந்நேர்வு தொடர்பாக மத்திய அரசின் சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்திற்கு சிறப்பு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால், மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளி / கல்வி நிலையங்களின் சரிபார்ப்பு படிவங்கள்(Institution Registration Form) தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் விடுபடாமல் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து அதற்கான சிறப்பு அறிக்கை அனுப்பப்படவேண்டும்.

iv. 2019-20 ஆம் ஆண்டிற்கான மூன்று கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கான விரிவான வழிகாட்டுதல்கள் (Guidelines) மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (Frequently Asked Questions) ஆகியவைகளை www.scholarships.gov.in என்ற இணைய தளத்தில் "Ministry of Minority affairs' -ன் கீழ் பதிவிறக்கம் செய்து கொள்ள

வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி பள்ளி /கல்வி நிலையங்களிலிருந்து ஆன்லைன் மூலம் வரப்பெறும் விண்ணப்பங்கள் கவனமுடன் சரிபார்க்கப்படவேண்டும்.

v. அனைத்து சிறுபான்மையினர் மாணவ மாணவியர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்கான கால அட்டவணை மற்றும் முக்கிய அம்சங்கள் குறித்து மாவட்ட அளவில் பத்திரிக்கை செய்தி, கேபிள் டிவி ,FM ரேடியோ அலைவரிசை மூலமாக தங்களது மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும்,சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளிலும் செய்தி வெளியிடவேண்டும்.

vi. இக்கல்வி உதவித்தொகை திட்டம் தொடர்பான செய்திகள் பள்ளி / கல்வி நிலையங்களின் அறிவிப்பு பலகையில் தவறாது மாணவ மாணவிகளுக்கு தெரியும் வகையில் வைக்கப்படவேண்டும்.

vii. கடந்த ஆண்டு சுமார் 32000 விண்ணப்பங்கள் பள்ளி /கல்வி நிலையங்களால் சரிபார்க்கப்படாமல் நிலுவையிலுள்ளது. இது போன்ற நிகழ்வுகள் வரும் காலங்களில் நிகழாதவாறு நடப்பு கல்வியாண்டில் தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் 100% தொடர்புடைய பள்ளி / கல்வி நிலையங்களால் சரிபார்க்கப்பட்டுள்ளதை உறுதி செய்யவேண்டும். இது தொடர்பான புகார்கள் பெறப்படின் தொடர்புடைய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் பொறுப்பேற்க நேரிடும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

viii. பள்ளி/கல்வி நிலைய வாரியாக சரிபார்க்கப்படவேண்டிய விண்ணப்பங்களின் விவரம் "Pending applications at Instittue Level" என்ற மெனுவில் மாவட்ட அளவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதனை அவ்வப்போது ஆய்வு செய்து சம்மந்தப்பட்ட பள்ளி / கல்வி நிலையத்தினை தலைமை ஆசிரியர் / முதல்வர் / டீன் / பதிவாளரை தொடர்புகொண்டு அதற்கான இடர்பாடுகள் உடன் களையப்பட வேண்டும். பள்ளி / கல்வி நிலையங்களால் ஒத்துழைப்பு அளிக்கப்படவில்லையெனில் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு உடனடியாக கொண்டு செல்லப்படவேண்டும். இதன் விவரத்தை இவ்வலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கவேண்டும்.

5. இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு கீழ்காணும் தொலைபேசி எண்/மின்னஞ்சல் மூலம் சென்னை சிறுபான்மையினர் நல ஆணையர் அலுவலகத்திலுள்ள மாநில ஒருங்கிணைப்பு அலுவலரை (State Nodal Officer) தொடர்பு கொள்ளளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| தொலைபேசி (help line) | 044-28523544 |
| மின்னஞ்சல் முகவரி | Nspnodal.mwtn@gov.in |

6. பள்ளி / கல்வி நிலையங்கள் / மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அளவில் தேசிய கல்வி உதவித்தொகை இணைய தளத்தில்

(National Scholarship Portal) மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்த சந்தேகங்கள், புகார்கள் மற்றும் அறிவுரைகள் அனைத்தும் மேற்காணும் மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் (State Nodal Officer) மூலமாக மட்டுமே பெறப்படவேண்டும். இதில் அரசு சாரா மூன்றாம் நபரின் ஆலோசனையோ அறிவுரையோ பெறப்படுவதாக தெரிய வந்தாலும், வழிமுறைக்கு மாறாக செயலாற்றினாலோ இந்நிகழ்வுக்கு தொடர்புடைய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பொறுப்பேற்பதுடன் உரிய ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ள நேரிடும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

7. இச்சுற்றறிக்கை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதலினை <u>இ.மெயில் மூலம்</u> இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு ஒன்று

ஒம்...மா. வள்ளலார்.
சிறுபான்மையினர் நல ஆணையர்,

18/7/19

சிறுபான்மையினர் நல ஆணையருக்காக

18/7/19

பெறுநர்

அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்,

நகல் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,

நகல் அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல் பி1 இருப்பு கோப்பு

இணைப்பு 1

## சிறுபான்மையினர் நல இயக்ககம்

## கல்வி உதவித்தொகை திட்டம் 2019-20

**தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (National Scholarshp Portal) பதிவு செய்யப்பட்டுள்ள பள்ளிகள்/கல்வி நிலையங்களின் சுய விவரங்கள், பயனாளர் குறியீடு விவரங்களை சரிபார்த்து ஒப்புதல் அளிக்க பின்பற்றப்பட வேண்டிய கட்டாய வழிமுறைகள்**

1. தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (NSP) பதிவு செய்யப்பட்டுள்ள நமது மாநிலத்தில் செயல்படும் பள்ளிகள்/கல்வி நிலையங்களின் இமெயில் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் அனைத்தும் செயலிழக்கப்பட்டுள்ளதால் அனைத்து பள்ளி /கல்வி நிலையங்களும் தத்தம் பயனாளர் குறியீடு விவரங்களை (Login credentials) மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலராக(District Nodal Officer) செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டார் மற்றும் சிறுபான்மையினா நலம் அலுவலர் மூலம் சரிபார்ப்பு செய்த பின்னரே தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (www.scholarships.gov.in) உள் நுழைந்து பதிவு செய்யப்பட்ட கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை சரிபார்க்க இயலும்.

2. இவ்வழிமுறைகளை பின்பற்ற அனைத்து பள்ளி / கல்வி நிலையங்களிலும் தேசிய கல்வி உதவித்தொகை இணையத்திற்கென தனியே ஒருங்கிணைப்பாளர்கள் (Institute Nodal Officer) நியமனம் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

3. பள்ளி/ கல்லூரி நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர் தற்போதுள்ள (Existing) பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் (National Scholarship Portal) உள்நுழைந்து (login) பள்ளி /கல்வி நிலையத்தின் சரிபார்ப்பு படிவத்தினை (Institution Registration Form) ஆன்லைனில் பூர்த்தி செய்து பள்ளி/கல்வி நிலைய ஒருங்கிணைப்பு அலுவலரின் அடையாள அட்டையினை ஸ்கேன் செய்து பதிவேற்றம் (upload) செய்தும் சமர்ப்பிக்க வேண்டும்.

4. சமர்ப்பிக்கப்பட்ட சரிபார்ப்பு படிவம் ஆன்லைன் மூலமாக மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலருக்கு (மா.பி.நஅலுவலர்) சென்றடையும். எனினும், தொடர்புடைய பள்ளி/கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர்(Institute Nodal officer) சரிபார்ப்பு படிவத்தினை இரண்டு நகல்கள் பிரின்ட் எடுத்து அதில் தனது புகைப்படத்தை ஒட்டி அதில் பள்ளி /கல்வி நிலைய தலைவரின்(Head of Institution) கையொப்பம் பெற்று அதனை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் 25.7.2019க்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

5. மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் (மா.பி.நஅலுவலர்) பள்ளி / கல்வி நிலையத்திடமிருந்து வரப்பெற்ற சரிபார்ப்பு படிவத்தின் அடிப்படையில் தேசிய இணைய தளத்தில் "Verify Institute Registration Form" என்ற மெனுவில் சரிபார்த்து ஒப்புதல் அளிக்கவேண்டும். அவ்வாறு அளிக்கும்போது, பள்ளி / கல்வி நிலைய தலைவரால் கையொப்பமிடப்பட்ட சரிபார்ப்பு படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்கள், இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்ட விவரங்களும் ஒன்றாக உள்ளனவா என்பதை உறுதி செய்த பின்பு ஒப்புதல் அளிக்கவேண்டும். இப்பணியினை 27.7.2019க்குள் நிறைவு செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

6. பின்னர், சரிபார்ப்பு படிவத்தின் ஒரு நகலை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தனது அலுவலகத்திலும், இரண்டாவது நகலை தொடர்புடைய பள்ளி /கல்வி நிலையத்திலும் பாதுகாப்பாக பராமரிக்கப்படவேண்டும். இப்படிவங்களை சிறுபான்மையினர் நலத்துறை உயர் அலுவலர்கள் ஆய்வு செய்யவுள்ளனர். போலியான விண்ணப்பங்கள் குறித்த புகார் எழும்பட்சத்திலும் ஆய்வு செய்யப்படும்.

7. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் பள்ளி /கல்வி நிலையத்தின் சரிபார்ப்பு படிவம் இணையத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், தொடர்புடைய பள்ளி /கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலரின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணிற்கு SMS மூலம் பயனாளர் குறியீடு மற்றும் புதிய கடவுச்சொல் (Login credentials) சென்றடையும்.

8. பின்னர் பள்ளி /கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர், பயனாளர் குறியீடு மற்றும் புதிய கடவுச் சொல் (Login credentials) பயன்படுத்தி தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் உள் நுழைந்து(login) அடிப்படை விபரங்களை (வகுப்பு, கல்வி கட்டணம், மற்றும் இன்னபிற விவரங்கள்) பூர்த்தி செய்து கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் சரிபார்க்க துவங்கலாம்.

9. பள்ளி / கல்வி நிலையத்தின் உள்நுழைவு விவரங்கள் (login credentials) ஏற்கனவே பணிபுரிந்த பள்ளி /கல்வி நிலையத்தின ஒருங்கிணைப்பு அலுவலரால் (Institute Nodal Officer) பகிரப்படவில்லையெனில், பள்ளி/கல்வி நிலைய தலைவரால் அளிக்கப்பட்ட கடிதத்துடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகி SMS மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**ஒம்...மா. வள்ளலார்.**
சிறுபான்மையினர் நல ஆணையர்,

18/7/19

சிறுபான்மையினர் நல ஆணையருக்காக

18/7/19